சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.01.2026

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | **112/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | ராஜ்குமார் |
| தந்தை பெயர் | : | மெய்ஞானகுரு |
| கிராமம் | : | தஞ்சாவூர் |
| தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| தொழில் | : | மருத்துவர் |
| வயது | : | 55 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் முன்பு தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று, நான் தற்போது மன்னார்குடியில் தனியார்

மருத்துவமனை நடத்தி வருகிறேன். நான் இதற்கு முன்பு தஞ்சாவூர் மருத்துவ கல்லூரியில் கடந்த 25.10.2009ம் தேதியன்று காலை 12.30 மணியளவில் பணியிலிருந்தபோது, திருவாரூர் மாவட்டம், குடவாசல் தாலுக்கா, திருக்கண்ணமங்கை தெற்கு தெருவை சேர்ந்த கண்ணையன் மகன் அ.சா.2 ராஜேந்திரன் என்பவர் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைகாக கடந்த 24.10.2009 இரவு 09.50 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்தவரை திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்து அனுப்பப்பட்ட மேற்படி ராஜேந்திரன் என்பவரை சிகிச்சைக்காக அவரது உறவினர் அ.சா.3 செல்வராஜ் அழைத்து வந்தார். அவருக்கு திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டின் நகலை கொண்டு வந்திருந்தார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவர் சுயநினைவோடு இருந்தார். இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, சீராக இருந்தது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்தேன். இதுதொடர்பாக நான் விபத்து பதிவேடு பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்து அனுப்பப்பட்ட மேற்படி கண்ணையன் மகன் பக்கிரிசாமி என்பவரை சிகிச்சைக்காக அவரது உறவினர் அ.சா.3 செல்வராஜ் அழைத்து வந்தார். அவருக்கு திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டின் நகலை கொண்டு வந்திருந்தார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவர் சுயநினைவோடு இருந்தார். இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, சீராக இருந்தது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்தேன். இதுதொடர்பாக நான் விபத்து பதிவேடு

பதிவு செய்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

அ.சா.2 ராஜேந்திரனுக்கு இருந்த காயங்கள் பற்றி நான் எந்த குறிப்பும் எடுக்கவில்லை என்றால்-சரிதான். பக்கிரிசாமி என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி நான் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் - சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.01.12 17:08:01 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.